ஈரோடு சென்னிமலையில்

# ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் கிராம ஊராட்சிகளுக்கு 52 மின்கல வாகனங்கள்: செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்



ஈரோடு.செப்.02-

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சென்னிமலை பகுதியில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தும், ரூ.67.88 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தும், ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் கிராம ஊராட்சிகளுக்கு 52 மின்கல (ஈ-கார்ட்) வாகனங்களை வழங்கி அதன் சேவையினை துவக்கி வைத்தார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இன்றைய தினம் (01.09.2025) சென்னிமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் கிராம ஊராட்சிகளில் வீடு வீடாக சென்ற குப்பை சேகரிக்கும் மின்கல (ஈ.கார்ட்) வாகனங்களை பசுவப்பட்டி ஊராட்சிக்கு ரூ.9.91 இலட்சம் மதிப்பீட்டில் 4 வாகனங்களும், எக்கட்டாம்பாளையம் ஊராட்சிக்கு ரூ.7.43 இலட்சம் மதிப்பீட்டில் 3 வாகனங்களும், குப்பிச்சிபாளையம் ஊராட்சிக்கு ரூ.4.95 இலட்சம் மதிப்பீட்டில் 2 வாகனங்களும், முகாசிபிடாரியூர் ஊராட்சிக்கு ரூ.37.17 இலட்சம் மதிப்பீட்டில் 15 வாகனங்களும், எல்லைகிராமம் ஊராட்சிக்கு ரூ.2.47 இலட்சம் மதிப்பீட்டில் 1 வாகனமும், கொடுமணல் ஊராட்சிக்கு ரூ.2.47 இலட்சம் மதிப்பீட்டில் 1 வாகனமும், முருங்கத்தொழுவு ஊராட்சிக்கு ரூ.22.30 இலட்சம் மதிப்பீட்டில் 9 வாகனங்களும், புதுப்பாளையம் ஊராட்சிக்கு ரூ.2.47 இலட்சம் மதிப்பீட்டில் 1 வாகனமும், ஒட்டப்பாறை ஊராட்சிக்கு ரூ.32.21 இலட்சம் மதிப்பீட்டில் 13 வாகனங்களும், புஞ்சை பாலத்தொழுவு ஊராட்சிக்கு ரூ.7.43 இலட்சம் மதிப்பீட்டில் 3 வாகனங்களும் என மொத்தம் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் 52 மின்கல (ஈ.கார்ட்) வாகனங்களை வழங்கி அதன் சேவையினை துவக்கி வைத்தார்.

தொடர்ந்து, சென்னிமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், 15-வது நிதி ஆணைய சுகாதார மானியத் திட்டத்தின் கீழ், ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்யும் பணியினையும், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், எக்கட்டாம்பாளையம் ஊராட்சி, சாணார்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ், ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக 2 வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணியினையும் துவக்கி வைத்தார். மேலும், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், குமாரபுரி குக்கிராமத்தில், நபார்டு திட்டத்தின் கீழ், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ.17.88 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறைகளையும், முகாசிபிடாரியூர் ஊராட்சி, சென்னியங்கிரிவலசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், குழந்தைகள் நட்புப் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 2 வகுப்பறை கட்டிடங்களையும் என ரூ.67.88 இலட்சம் மிதிப்பீட்டிலான திட்டப்பணிகளை திறந்து வைத்து பயன்பாட்டிற்கு வழங்கினார்.

இந்நிகழ்வுகளின் போது, மாநிலங்களவை உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ, சென்னிமலை பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா, சென்னிமலை வட்டார வளர்ச்சி அலுவலர் பாலமுருகன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில்

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது



ஊட்டி,செப்.02-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா, முதியோர், விதவை, கல்வி உதவி தொகை, வங்கி கடன், சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 140 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும்; மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள்; உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கலெக்டர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், கலெக்டர் , வருவாய்த்துறை சார்பில், பல்வேறு இடங்களில் நடந்த வாகன விபத்தில் பெருங்காயம் அடைந்த 3 நபர்களுக்கு முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து ரூ.1.50 இலட்சம் பெறுவதற்கான (தலா ரூ.50,000/-) அனுமதி ஆணையினையும், வாகன விபத்தில் உயிரிழந்த குன்னூர் அதிகரட்டி பகுதியை சேர்ந்த லட்சுமணன் என்பவரின் மனைவி கீதா என்பவருக்கு ரூ.1 இலட்சத்திற்கான அனுமதி ஆணையினையும், வாகன விபத்தில் உயிரிழந்த குன்னூர் மாடல் ஹவுஸ் பகுதியை சேர்ந்த பாபு என்பவரின் மனைவி மஞ்சுளா என்பவருக்கு ரூ.1 இலட்சத்திற்கான அனுமதி ஆணையினையும், தமிழ்நாடு அரசு பணியாணர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த பொறியியல் பணிகளில் காலியாகவுள்ள சாலை ஆய்வாளர் பணியாளர் பணிக்கு தேர்வான 6 நபர்களுக்கு பணிநியமனை ஆணைகளையும் கலெக்டர் வழங்கினார்.

மேலும், கலெக்டர் , உதகை காந்திநகர் பகுதியை சேர்ந்த சங்கீதா என்பவர் தொலைந்து போன குடும்ப அட்டைக்கு பதிலாக, நகல் குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்ததை தொடர்ந்து உடனடியாக பரிசீலனை செய்து, குடும்ப அட்டைக்கான நகலினை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ராதாகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் பழனிச்சாமி (நிலம்), கண்ணன் (கணக்குகள்) மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து விதிகளை மதிக்கவும்

# ஈரோடு மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 31 பயனாளிகளுக்கு ரூ.47.17 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் ச.கந்தசாமி வழங்கினார்



ஈரோடு, செப்.02-

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, கலைஞரின் கனவு இல்லம், இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 175 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை கலெக்டர் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார். மேலும், முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, இக்கூட்டத்தில் கலெக்டர், தொழிலாளர் நலத்துறையின் சார்பில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு, வீட்டுவசதி திட்டத்தின் கீழ், சொந்த நிலத்தில் வீடு கட்டிக் கொள்ள 3 பயனாளிகளுக்கு நிதியுதவியாக தலா ரூ.4,00,000/- வீதம் ரூ.12,00,000/- மதிப்பீட்டிலும், 18 பயனாளிகளுக்கு ரூ.34,30,000/- மதிப்பீட்டில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் கட்டுப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகள் என ரூ.46,30,000/- மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் விலையில்லா சலவைப்பெட்டிகள் தலா ரூ.8,781/- என 10 பயனாளிகளுக்கு ரூ.87,810/- மதிப்பீட்டிலும் என மொத்தமாக 31 பயனாளிகளுக்கு ரூ.47.17 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி. காஞ்சன் சௌதரி தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் நூர்ஜஹான், உதவி ஆணையர்(தொழிலாளர் நலத்துறை) முருகேசன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திமுக கூட்டணியில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கேட்போம்: அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் ஈரோட்டில் பேட்டி



ஈரோடு, செப்.02-

அகில இந்திய காங்கிரஸ் செயலாளரும் கர்நாடக மாநில பொறுப்பாளருமான கோபி ஈரோட்டில் நிருபர்களிடம் கூறியதாவது தமிழ்நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சிக்கு சொந்தமான சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பிரதமர் மோடி போலி வாக்காளர்கள் சேர்த்து வெற்றி பெற்று உள்ளார். இதற்கான ஆதாரங்களை ராகுல் காந்தி மக்களிடம் எடுத்து கூறி வருகிறார்.

போலி வாக்காளர்கள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நெல்லையில் வருகிற 7 ந் தேதி மாநாடு நடக்கிறது. போலி வாக்காளர்கள் குறித்து காங்கிரஸ் தொண்டர்கள் கிராமம் கிராமமாக வீடு வீடாக சென்று பொது மக்களுக்கு விளக்கி கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். போலி வாக்காளர்கள் திருட்டை அம்பலப்படுத்தும் வரை காங்கிரஸ் கட்சியின் போராட்டம் ஓயாது. விரைவில் மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்படும்.

பாராளுமன்றம் சட்டமன்றம் உள்ளாட்சி தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும். வருகிற தேர்தலில் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கவும் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கேட்கவும் கட்சி தலைமையிடம் கோரிக்கை வைப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது ஈரோடு மாநகர மாவட்ட தலைவர் திருச்செல்வம் மண்டல தலைவர் ஜாபர் சாதிக் இளைஞர் காங்கிரஸ் மாநில பொது செயலாளர் ஆரீப் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் செயலாளர் பிரபு சிறுபான்மை பிரிவு பாட்ஷா மற்றும் அர்ஷத்மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

நீலகிரி மாவட்டத்தில்

# உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பெறப்படும் மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவுறுத்தல்



ஊட்டி செப்.02-

நீலகிரி மாவட்ட ஆட்சியர்; கூடுதல் அலுவலகத்தில், பல்வேறு துறைகளின் சார்பில், மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கலெக்டர் தெரிவித்ததாவது

நீலகிரி மாவட்டத்தில், பல்வேறு துறைகளின் சார்பில், மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகள் உரிய காலத்திற்குள் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் எனவும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கணக்குகள் மூலம் இ எஸ் ஆர் தொடர்பாக கணக்காளர்களுக்கு பயிற்சிகள் வழங்க வேண்டும் எனவும், 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும் எனவும்; கலெக்டர் தெரிவித்தார்.

முன்னதாக, கலெக்டர் தலைமையில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், தமிழ்நாடு உரிமைகள் சட்டம் தொடர்பாக அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இக் கூட் டத் தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி அபிலாஷா கௌர் மாவட்ட வன அலுவலர் (நீலகிரி கோட்டம் ) கௌதம் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ராதாகிருஷ்ணன், வருவாய் கோட்டாட்சியர்கள் சதீஷ் (உதகை), குணசேகரன் (கூடலூர்) உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில், தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்




ஈரோடு, செப்.2-

ஈரோட்டில் மாநகர மாவட்ட தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாநகர மாவட்ட தலைவர் விஜயகுமார் தலைமை வகித்தார். மாநில துணைத்தலைவர் விடியல் சேகர், மாநில செயற்குழு உறுப்பினர் சந்திரசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், முன்னாள் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி ஈரோடு மாவட்டத்தில். சுற்றுப்பயணம் வரும்போது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக சிறப்பாக வரவேற்பு அளிப்பது ,பூத் கமிட்டி நிர்வாகிகளை நியமிப்பது, மண்டல வாரியாக மற்றும் பகுதி வாரியாக பொறுப்பாளர்களை நியமிப்பது, மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களின் பற்றாக்குறை போக்க வேண்டும், சொத்து வரி, வீட்டு வரி, மின் கட்டண உயர்வை தமிழ்நாடு அரசு திரும்ப பெற வேண்டும்,

ரேசன் கடைகளில் பாம் பாயிலுக்கு பதிலாக கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும், சொத்து பதிவு கட்டண உயர்வை கண்டித்து போராட்டம் நடத்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதில், மாநில செயற்குழு உறுப்பினர்கள் ஈஸ்வரமூர்த்தி, கதிர்வேல், மாவட்ட விவசாயி அணி தலைவர் சம்பத்குமார், வட்டார தலைவர் புவனேஸ்வரன், மாவட்ட தொழிற்சங்க தலைவர் ரவி, எஸ்சி, எஸ்டி தலைவர் கண்ணம்மா மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.

# ஈரோடு வேளாளர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் கண்காட்சி



ஈரோடு செப் 2

வேளாளர் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியில் ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர் சமுதாயத்திற்கு உபயோகமாகும் வகையில் தங்களது அறிவியல் படைப்புகளைத் திறம்பட படைத்து தங்களது வகுப்பறையில் காட்சிக்கு வைத்தனர். பள்ளியின் தாளாளர் செது. சந்திரசேகர் முதல்வர் செல்வி வெ லதா, நிர்வாக அதிகாரி சென்னியப்பன் அறிவியல் கண்காட்சியைத் துவக்கி வைத்து மாணவியரது அறிவியல் படைப்புகளைப் பார்வையிட்டனர் சிறப்பு விருந்தினர்களாக ஈரோடு வானியல் மன்ற உறுப்பினர்கள் தட்சிணாமூர்த்தி மற்றும் எஸ். கீதா மாணவியர்களுக்கு தொலைநோக்கி மூலம் சூரியப்புள்ளிகளைக் காண்பித்தனர். பவர்பாயிண்ட் விளக்கக்காட்சிகளைத் திரையில் காண்பித்து சூரியக்குடும்பம் குறித்து விவரமாக எடுத்துரைத்தனர். பெற்றோர்கள் அறிவியல் கண்காட்சிக்கு வருகை தந்து மாணவியரது அறிவியல் படைப்புகளைக் கண்டு வியந்தனர். விளக்கவுரைகளைக் கேட்டறிந்து மாணவியரைப் பாராட்டினர். விண்வெளி மனிதன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி எ.பி.ஜெ. காலம் போன்று அப்துல் கைகுலுக்குவது அவர்களுடன் ஐயா அமைக்கப்பட்டிருந்த பேனர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள பெற்றோர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அறிவியல் விஞ்ஞானிகள் மேரி கியூரி, திரு விக்ரம் சாராபாய், சர். சி.வி.ராமன், .ஐன்ஸ்டின் மற்றும் எ.பி.ஜெ. அப்துல் கலாம் போன்று மாணவியர் வேடமணிந்து வந்து அறிவியல் கண்காட்சியைச் சிறப்பித்தனர்.

# சக்தி சிறப்பு பள்ளி மாணவர்களுக்கு இன்பச்சுற்றுலா



ஈரோடு,செப்.02-

சக்தி சிறப்புப்பள்ளி மற்றும் மறுவாழ்வு மையத்தில் பயிற்சி பெறும் 95 சிறப்பு குழந்தைகள் இடமாற்றத்தை புரிந்துகொள்ளவும், மனமகிழ்ச்சிக்காகவும் மற்றும் அவர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும் அவர்களின் பெற்றோர்களுடன் இன்பச்சுற்றுலா பெருந்துறை அருகில் உள்ள "சில்-அவுட் தீம்பார்க்கிற்கு காலை 9.30 மணியளவில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு பலவகையான தண்ணீர் விளையாட்டுகளிலும், தண்ணீர் அல்லாத தூரி, சருக்கல், கொலம்பஸ், டிரேகன், ஏரோபிளேன் ராட்டினம் போன்றவற்றிலும் குழந்தைகள் தங்கள் பொழுதினை மகிழ்ச்சியாகக் கழித்தனர்.

சிறப்புக் குழந்தைகளின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்களும் கலந்து கொண்டனர்.

சிறப்பு குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் பணியாளர்களுக்கான இன்ப சுற்றுலாவிற்கான செலவுகளை அறக்கட்டளை நிர்வாகம் ஏற்றுக்கொண்டது.

### தருமபுரி மாவடத்தில்

# விவசாயிகளுக்கான ஈட்டுத்தொகை மற்றும் கால்வாய் பணிகளை விரைவுபடுத்த வேண்டும்

## எம்.எல்.ஏ. வெங்கடேஷ்வரன் வலியுறுத்தல்



**தருமபுரி செப் 02-**

தருமபுரி மாவட்டத்தின் மிக முக்கிய பிரச்சினை நீர்ஆதாரம் ஆகும். பெரிய ஆறுகள் ஏதும் ஓடாத இந்த மாவட்டம் முழுக்க, முழுக்க மழையை நம்பியே இருக்கிறது. எண்ணேகொல்புதூர் அணைக்கட்டில் இருந்து வலதுபுறம் கால்வாயில் 51 கிலோ மீட்டர் தூரம் நீர்வரத்துக் கால்வாய் அமைத்து தருமபுரி மாவட்டத்திலுள்ள தும்பலஅள்ளி அணைக்கு தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்த கால்வாய் அமைக்கும் பணிக்கு 233 கோடி ரூபாயும், விவசாயிகளிடமிருந்து நிலம் எடுப்பதற்கு 112 கோடி ரூபாயும் அரசு நிதி ஒதுக்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டம் நிறைவேற்றினால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 8க்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு நீர்வரத்து கிடைக்கும். தருமபுரி மாவட்டத்தில் தும்பலஅள்ளி ஏரியில் இருந்து கால்வாயின் இருபுறமும் உள்ள 22 ஊராட்சிகளுக்குட்பட்ட 65க்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பும். இந்த ஏரிகளில் தண்ணீர் நிரம்பினால் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாய நிலம் பாசன வசதி பெறும். பல லட்சம் விவசாயிகள் பயனடைவார்கள். நீர்வரத்துக் கால்வாய் அமைப்பதற்கு தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளிடம் இருந்து விவசாய நிலம் அரசு கையகப்படுத்தியுள்ளது. இந்த நிலத்திற்கான ஈட்டுத்தொகை வழங்கியதில் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட பல விவசாயிகளுக்கு இன்னும் ஈட்டுத்தொகை முழுமையாக சென்றடையவில்லை. இதனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய வறுமை நிலையில் உள்ளனர். கால்வாய் அமைக்க நிலம் அளித்த அனைத்து விவசாயிகளுக்கான ஈட்டுத்தொகையை விரைந்து வழங்கிடவும், கால்வாய் அமைக்க விவசாயிகளிடம் இருந்து தேவையான நிலத்தை எடுப்பதற்கான தொகையை விடுவித்து, தும்பலஅள்ளி அணைக்கு நீர்கொண்டு வரும் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வேண்டும். மேலும், தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி மற்றும் தருமபுரி வட்டங்களில் இடையே பாய்ந்தொடுகின்ற சனத்குமார் நதியானது நல்லம்பள்ளி வட்டத்திலுள்ள வத்தல்மலையின் சுற்றுப்பகுதியில் மழைகாலங்களில் உற்பத்தியாகும் ஓடைகள் மற்றும் தருமபுரி வட்டத்திலுள்ள சிறுசிறு ஓடைகள் அனைத்தும் ஒன்றிணைந்து சனத்குமார் நதியாக உருவெடுத்து சுமார் 46கி.மீ தூரம் பயணித்து கம்பைநல்லூர் அருகே தென்பெண்ணையாற்றில் கலக்கிறது. சனத்குமார் நதியின் குறுக்கே 14 அணைக்கட்டுகள் கட்டப்பட்டு பாசனம் நடைபெற்று வருகிறது. மேலும் இதன் தொடர்ச்சியாக மாதேமங்கலம் ஏரி, அதியமான்கோட்டை ஏரி, எர்ரப்பட்டி ஏரி, ஒட்டப்பட்டி ஏரி, உங்கரானஅள்ளி ஏரி, இலக்கியம்பட்டி ஏரி, இராமக்காள் ஏரி, கிருஷ்ணாபுரம் சின்ன ஏரி, கொளநாச்சியம்மாள் ஏரி மற்றும் வெள்ளாளப்பட்டி ஏரி உள்ளிட்ட பல ஏரிகள் சேர்ந்து மொத்தம் 9880 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மேற்கண்ட ஏரிகளை தூர்வாருதல் வேண்டும். சனத்குமார் நதி பாய்ந்தோடும் தருமபுரி நகராட்சி பகுதியில் பெரும்பாலான பகுதியில் ஆற்றை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் ஆற்றின் அகலம் குறைந்து காணப்படுகிறது. எனவே இதன் பொருட்டு பாசன கால்வாய்களில் பாசனத்திற்கு போதிய தண்ணீர் செல்லாததால் பயிரிடும் பரப்பு குறைந்து வருகிறது.

எனவே இதனை கருத்தில் கொண்டு சனத்குமார் நதியின் ஆற்றின் கரையோர ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், எல்லை கற்களை நடுதல், ஆற்றுப் பகுதியில் தூர்வாருதல் மற்றும் நகராட்சி பகுதியில் செல்லும் மண் கால்வாய் பகுதி முழுவதும் சிமெண்ட் கான்கிரீட் கால்வாயாக மாற்றி அமைத்து கொடுத்தல், புதிய தடுப்பணைகள் அமைத்தல் போன்ற பணிகள் கடந்த 2021–22 ஆண்டு மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட திட்டங்களை விரைந்து செயல்படுத்த வேண்டுமென கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

### போச்சம்பள்ளி

# அரசு பள்ளியில் ரூ.26 லட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம் கட்ட அடிக்கல் நாட்டு விழா

## தே.மதியழகன் எம்.எல்.ஏ, பணியை துவக்கி வைத்தார்



**கிருஷ்ணகிரி செப் 02-**

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கலையரங்கம் அமைக்க அடிக்கல் நாட்டு விழா நடந்தது. இவ்விழாவில் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் எம்.எல்.ஏ, கலந்து கொண்டு பணியை துவக்கி வைத்தார். கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அடுத்த போச்சம்பள்ளி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் போச்சம்பள்ளி நகர அரிமா சங்கம் ஏற்பாட்டில் ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம் கட்ட அடிக்கல் நாட்டு விழா பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவரும் அரிமா சங்க செயலாளருமான கௌதம் தலைமையில் திமுக ஒன்றிய செயலாளர் சாந்தமூர்த்தி, லயன்ஸ் கிளப் முன்னாள் மாவட்ட ஆளுநர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் தலைமை ஆசிரியை காந்திமதி வரவேற்புரையில் பர்கூர் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட கழக செயலாளருமான மதியழகன் எம்.எல்.ஏ கலந்துகொண்டு பூமி பூஜை செய்து பணியை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இளையராஜா, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் அம்மன் ராஜா, மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் டாக்டர்.தென்னரசு, அரிமா சங்க நிர்வாகிகள் பாஸ்கர் ஜூவல்லர்ஸ் கிருஷ்ணன், பழனி, ராமன், விஸ்வநாதன், சுப்ரமணி, மந்திரி கவுண்டர் சீனிவாசன், சஞ்சய் ஜூவல்லர்ஸ் கேசவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சரவணன், சத்தியமூர்த்தி , முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் அருள்குமார் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அர்ஜூனன், மற்றும் கழக நிர்வாகிகள் இருபால் ஆசிரியர்கள் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# ஜி.சி.சி.ஐ செனாட் கூட்டத்தில் ஆந்திரா தமிழக பிஷப்கள் தேர்வு




**அரக்கோணம் செப்.2**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் வட்டம் மஞ்சம்பாடி கிராமத்தில் குளோபல் சர்ச் ஆப் கிறிஸ்ட் செனாட் கூட்டம் நடைபெற்றது இந்த கூட்டத்தில் ஆந்திர மாநிலம் தமிழ்நாடு பகுதிகளுக்கான பிஷப்கள் தேர்வு நடைபெற்றது. குளோபல் சர்ச் ஆப் கிறிஸ்ட் பிரதமர் பேராயர் டாக்டர் ஐசக் ஐயா தலைமையில் நடந்த கூட்டத்திற்கு தென் மாநிலங்களின் செயலாளர் பேராயர் டேவிட் குட்டி, மாநில முதன்மை செயலாளர் செட்ரிக் பெநோ, மாநில செயலாளர் கிறிஸ்து ராஜா, மாநில பொருளாளர் பர்ண பாஸ் சைமன் உட்பட தமிழ் மாநில பேராயர்கள், ஆந்திர மாநில பேராயர்கள் மற்றும் பாண்டிச்சேரி மாநில பேராயர் முன்னிலை வகித்தனர் நூற்றுக்கு மேற்பட்ட பேராயர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தமிழ்நாடு ஆந்திரா மாநிலத்திற்கான பிஷப்புகளை தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர் இவர்கள் பதவி காலம் 3 ஆண்டுகள் என அறிவிக்கப்பட்டன கூட்டத்தின் முடிவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன அவைகள் வருமாறு இந்தியாவில் தற்போது 20% இருந்து 40% பேர் கிறிஸ்துவ மக்கள் பெருக்கியுள்ளனர். இவர்கள் கல்வி வேலை வாய்ப்பில் பிராமணர்களுக்கு 10 விழுக்காடு ஒதுக்கப்பட்டது. போல கிறிஸ்தவர்களுக்கும் மத்திய மாநில அரசுகள் வழங்க வேண்டும். தற்போது ஒவ்வொரு மாநிலத்திலும் சட்டமன்றத்திலும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மதமாற்ற தடை சட்டம் உருவாக்கப்பட்டு வருவதால் அந்த தடை சட்டங்களை ரத்து செய்ய வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி அவரவர் விரும்பிய மதத்தை தெரிந்து கொள்ளவும் வாழவும் வழி வகுக்கிறது அந்த அடிப்படையில் கிறிஸ்தவர்கள் மீது அவதூறான வழக்குகள் பதிவு செய்வதை நிறுத்தப்பட வேண்டும். கிறிஸ்தவர்களும் அரசியலில் ஈடுபட வேண்டும் என்று மத்திய அரசு விரும்புவதால் அனைத்து கிறிஸ்தவர்களும் பேராயர்களும் போதகர்களும் அரசியல் ஈடுபடும் போது அதற்கு இடையூறாக மற்ற அரசியல் கட்சிகள் இருக்கக் கூடாதபடி தடுத்து நிறுத்த வேண்டும் கிறிஸ்துவ சிறுபான்மை மக்கள் கல்வி நிறுவனங்கள் மருத்துவக் கல்லூரிகள் செவிலியர் கல்லூரியில் சட்டக் கல்லூரிகள் கலை அறிவியல் கல்லூரிகள் கல்வியியல் கல்லூரிகள்நிகழ் நிலை பல்கலைக்கழக உருவாக்குவதற்கு மத்திய அரசு சட்டம் கொண்டு வர வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்களும் நிறைவேற்றினர் கல்லூரி மேலாளர் ஜெய்சன் நன்றி கூறினார்

### வேலம்பட்டியில் நடந்த நிகழ்ச்சியில்

# மாற்றுக் கட்சி இளைஞர்கள் 300க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணைந்தனர்



**கிருஷ்ணகிரி செப் 02-**

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டிணம் அடுத்த நாகோஜனஹள்ளி பேரூராட்சிக்கு உட்பட்ட வேலம்பட்டியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தில் இளைஞர்களின் இணைப்பு விழா நடந்தது. இதில் மாற்றுக் கட்சி இளைஞர்கள் 300க்கும் மேற்பட்டோர் அதிமுகவில் இணைந்தனர். இவ்விழா பேரூர் கழக செயலாளர் அண்ணாதுரை தலைமையில் ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் வரவேற்புரையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான அசோக்குமார் ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் தமிழ்செல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கழகத் துணைப் பொதுச் செயலாளரும் வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினருமான கே.பி முனுசாமி, மாற்றுக் கட்சியிலிருந்து விலகி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இனைந்த 300 இளைஞர்களுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சால்வை அனிவித்தது வாழ்த்துகளை தெரிவித்து கட்சியில் இனைத்துக்கொண்டார்.

உடன் இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளர் சதீஷ்குமார் மாவட்ட பொருளாளர் சுந்தரவடிவேல் அம்மா பேரவை மாவட்ட செயலாளர் எஸ் எம் மாதையன் ஒன்றிய செயலாளர்கள், சாமிநாதன், பையூர் ரவி, இ.சி கோவிந்தராசன், ரவிச்சந்திரன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மனோரஞ்சிதம் நாகராஜ், அம்மா பேரவை நகர செயலாளர் சக்தி முன்னாள் கவுன்சிலர் நகரத் துணைச் செயலாளரும் கவுன்சிலர் சுமித்ரா வெங்கடேஷ் முன்னாள் கவுன்சிலர் சரவணன் தகவல் தொழில்நுட்ப பிரிவு இணை செயலாளர்கள் விஷ்ணு ரமேஷ் மாவட்ட பிரதிநிதி நதியா நகர அவைத் தலைவர் முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் வைரமணி உள்ளிட்ட ஏராளமான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். இறுதியில் கார்த்திக் அண்ணாதுரை நன்றியுரை ஆற்றினார்

### பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ்

# செஞ்சி கோட்டை பார்வையிட்டு வரலாறு குறித்து கேட்டறிந்தார்



**செஞ்சி, செப். 2-**

மராட்டிய மன்னர்களால் செஞ்சிக்கோட்டை கட்டப்பட்டது என அறிவித்திருந்தது சர்ச்சையை கிளப்பியுள்ள நிலையில் பல்வேறு தலைவர்கள் செஞ்சி கோட்டையை பார்வையிட்டு ஆய்வு செய்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று மதியம் பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் செஞ்சி கோட்டைக்கு வந்து செஞ்சி கோட்டை பார்வையிட்டார். முன்னதாக அவர் செஞ்சி கோட்டையில் உள்ள வீர ஆஞ்சநேயர் கோவிலுக்கு சென்று கோவிலில் தீபம் ஏற்றி வழிபாடு செய்தார். அதனைத் தொடர்ந்து செஞ்சி ராஜகிரி கோட்டை நுழைவாயிலில் இறங்கி கோட்டை வரைபடம் வைத்திருப்பதை பார்வையிட்டு விபரம் கேட்டறிந்தார். தொடர்ந்து கோட்டையை யினுல் நடந்து சென்ற அவர் கோட்டை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த பழங்கால கற்சிலைகளை பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து செஞ்சிக் கோட்டை கல்யாண மஹாலை பார்வையிட சென்றவர் பராமரிப்பு பணி காரணமாக கல்யாண மஹால் பூட்டி வைக்கப்பட்டிருந்ததால் வெளியே இருந்து கல்யாண மஹாலை பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து கோட்டை குதிரைலாயம் வளாகத்தில் பார்வையிட்ட அவர் அங்கு கோட்டையின் வரலாறு குறித்து கேட்டறிந்தார். வரலாற்று ஆய்வாளர் ஓய்வு பெற்ற ஆசிரியர் முனுசாமி கோட்டையின் வரலாறு குறித்து அவருக்கு விளக்கி கூறினார்.பின்னர் அங்கிருந்து அவர் புறப்பட்டு சென்றார். அப்போது மயிலம் சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார் முன்னாள் எம்எல்ஏ கணேஷ்குமார் உள்பட ஏராளமான பாமக நிர்வாகிகள் தொண்டர்கள் உடன் இருந்தனர்.

### கம்பைநல்லூர்

# ஸ்ரீராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மேசைப்பந்து போட்டியில் மாவட்ட அளவில் சாதனை



**மொரப்பூர், செப்.2-**

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான போட்டி தர்மபுரி மாவட்ட அளவில் நடைபெற்றது.இப் போட்டியில் கம்பைநல்லூர் ஸ்ரீராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு சாதனை படைத்தனர்.இப்பள்ளி மாணவர் வேதிஸ் ஒற்றையர் பிரிவில் முதலிடமும்,இரட்டையர் பிரிவில் வேதிஸ் மற்றும் நிர்மலரசு ஆகியோர் முதலிடமும், மாணவிகளுக்கான இரட்டையர் பிரிவில் தேவி ஸ்ரீ மற்றும் சஞ்சனா ஆகியோர் முதலிடமும்,ஓவியா ஸ்ரீ 2 ஆம் இடமும் பிடித்து சாதனை படைத்தனர். மேலும் மாவட்ட அளவில் சாதனை படைத்த மாணவ, மாணவிகள் மாநில அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் மாவட்ட அளவில் சாதனை படைத்த மாணவ,மாணவிகளை ஸ்ரீராம் கல்வி குழுமங்களின் நிறுவனர் எம். வேடியப்பன்,தாளாளர் சாந்தி,பள்ளி நிர்வாக இயக்குனர்கள் வே.தமிழ்மணி, பவானி,பள்ளி முதல்வர்கள் சாரதி மகாலிங்கம்,ஜான் இருதய ராஜ் ஆகியோர் வாழ்த்தி பாராட்டினார்கள். சிறப்பாக பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் செல்வம்,புவனேஸ்வரி,திருப்பதி,தினேஷ், பாண்டி,ராஜதுரை,அப்பு ஆகியோரையும் பள்ளி நிர்வாகம் சார்பில் வாழ்த்தி பாராட்டினார்கள்.

### கடத்தூர் பேரூராட்சி

# புது ரெட்டியூரில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி

## பேரூராட்சி தலைவர் கு.மணி நேரில் ஆய்வு



**மொரப்பூர், செப்.2-**

தர்மபுரி மாவட்டம்,கடத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட 10 வது வார்டு புது ரெட்டியூரில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ .1.95 லட்சம் மதிப்பில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப் பணியினை கடத்தூர் பேரூராட்சி தலைவர் கு.மணி,பேரூராட்சி செயல் அலுவலர் எம்.விஜய சங்கர்,பேரூராட்சி உறுப்பினர் ஸ்ரீதேவி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.அப்போது நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சிமெண்ட் சாலை அமைக்க 3 ல் ஒரு பங்கு நிதியை தன் சொந்த நிதியிலிருந்து வழங்கிய பேரூராட்சி உறுப்பினர் ஸ்ரீதேவிக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர். பேரூராட்சி உதவியாளர்கள் பெருமாள்,மோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### நாமக்கலில்

# மக்கள் குறைதீர்வு நாளில் மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி கோரிக்கை மனுக்களை பெற்றார்



**நாமக்கல் செப் 02-**

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, அவர்கள் தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, வங்கி கடன் உதவி, குடிசைமாற்று வாரிய வீடு, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டி பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 422 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, அவர்களிடம் பொதுமக்கள் வழங்கினார்கள். மனுக்களைப் பெற்று கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மனுக்களை பரிசீலினை செய்து உரிய அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இக்கூட்டத்தில், சிப்காட் தனி மாவட்ட வருவாய் அலுவலர் மா.க.சரவணன், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) சு.வடிவேல், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு. செல்வராசு உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
ந.க. எண். 461 / 2025
வெங்கடேஷ், S/O. சிரங்ககவுண்டர்,
க.எண். 54, கொட்டாயூர்,
நெடுங்குளம் கிராமம்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
.......... மனுதாரர்
/ எதிராக /
வட்டாட்சியர் அவர்கள்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
..... எதிர்மனுதார்

அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தந்தை சிரங்ககவுண்டர் என்பவர் கடந்த 13 –07 –1997 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேண்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் –கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
/ நீதிமன்ற உத்தரவு படி /
P. VELMURUGAN., B.com.B.L.,
Advocate. Idappadi.

வருவாய் உட்கோட்ட நடுவர்
மற்றும் வருவாய்
கோட்டாட்சியர் அவர்கள்
கிருஷ்ணகிரி
ந.க.எண்.மே.எ.
அதிமு.6572/2025/டி
நாள்: 26.08.2025
பாசில், த/பெ.ஏதாஜ்,
காமராஜ் நகர், ஊத்தங்கரை அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்
......மனுதாரர்
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.
........எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய, எனது தாத்தா திரு.பஸ்லூன் த/பெ. அப்துல் சலாம் என்பவர் கடந்த 07.05.2010-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம் மற்றும் அஞ்சல், காமராஜ் நகரில் உள்ள எனது வீட்டில் இறந்துவிட்டார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கே-ாரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.
//உத்தரவுப்படி//
மனுதாரர்
பாசில், த/பெ.ஏதாஜ்,
காமராஜ் நகர், ஊத்தங்கரை அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்
செல்: 7904123238

